# வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

**(துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு)**

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள அத்துடன் உரிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள பொருத்தமான பரீட்சார்த்திகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| **பிரதி முகாமையாளர் (மனித வளங்கள்) பதவி எம்எம் 1-1, தரம் II (01 வெற்றிடம்)** | |
|---|---|
| **வெளிவாரிப் பரீட்சார்த்திகள்** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து வியாபார முகாமைத்துவம்/ விஞ்ஞானம்/ வர்த்தகம்/ சந்தைப்படுத்தல்/ மனிதவளத்தில் பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டமொன்று<br>**அத்துடன்**<br>மேற்குறிப்பிட்ட தகைமையைப் பெற்ற பின்னர், உரிய துறையில் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் முகாமைத்துவப் பதவியில் (MM) குறைந்தபட்சம் ஒரு (01) வருட திருப்திகரமான சேவை. |
| **உள்வாரிப் பரீட்சார்த்திகள்** | மேற்குறிப்பிட்ட வெளிவாரிப் பரீட்சார்த்திகள் தொடர்பான தகைமைகள்<br>**அல்லது**<br>உரிய துறையில் கனிஷ்ட முகாமையாளர் (ஜேஎம் 1-2) அல்லது அதற்கும் மேற்பட்ட பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை. |
| **Salary Scale** | எம்எம் 1-1- 2025- ரூபா. (91,690- 10× 2,480-15× 3450- 168,240)<br><br>தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியானவர் 01/01/2026 இன் சம்பளத்திற்கு அமைவாக ரூபா. 81,710/- ஆகவுள்ள எம்எம் 1-1 தரம் II இன் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.<br><br>இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும். |

| **உள்ளகக் கணக்காய்வாளர் பதவி – எம்எம் 1-1, தரம் II (01 வெற்றிடம்)** | |
|---|---|
| **வெளிவாரிப் பரீட்சார்த்திகள்** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து நிதி, கணக்கீடு அல்லது வர்த்தகத்தில் பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டமொன்று<br>**அல்லது** |

| | |
|---|---|
| | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (ICASL) இடைநிலை மட்டத் தகைமை<br>**அல்லது**<br>பட்டய முகாமைத்துக் கணக்காளர் நிறுவகத்தின் (CIMA) இடைநிலை மட்டத் தகைமை<br>**அல்லது**<br>சான்றுப்படுத்தப்பட்ட மற்றும் கூட்டாண்மைக் கணக்காளர் சங்கத்தின் (ACCA) இடைநிலை மட்டத் தகைமை<br>**அல்லது**<br>உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா – இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE).<br>**அத்துடன்**<br>மேற்குறிப்பிட்ட தகைமையைப் பெற்ற பின்னர், அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் முகாமைத்துவப் பதவியில் (MM) கணக்கீடு அல்லது நிதியில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவம். |
| **உள்வாரிப் பரீட்சார்த்திகள்** | மேற்குறிப்பிட்ட வெளிவாரிப் பரீட்சார்த்தி தொடர்பான தகைமைகள்<br>**அல்லது**<br>உரிய துறையில் கனிஷ்ட முகாமையாளர் (ஜேஎம் 1-2) அல்லது அதற்கும் மேற்பட்ட பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை. |
| **சம்பள அளவுத்திட்டம்** | எம்எம் 1-1- 2025- ரூபா. (91,690- 10× 2,480-15× 3450- 168,240)<br><br>தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியானவர் 01/01/2026 இன் சம்பளத்திற்கு அமைவாக ரூபா. 81,710/- ஆகவுள்ள எம்எம் 1-1 தரம் II இன் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.<br><br>இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும். |

| **உதவி முகாமையாளர் பதவி - ஜேஎம் 1-2, தரம் II (03 வெற்றிடங்கள்)** | |
|---|---|
| **வெளிவாரிப் பரீட்சார்த்திகள்** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து முகாமைத்துவம் அல்லது வர்த்தக துறையில் பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டமொன்று<br>அல்லது<br>பட்டய கப்பல் தரகர் நிறுவகத்தின் (ஐக்கிய இராச்சியம்) தகைமைப் பரீட்சையில் 03 பாடங்கள் |
| **உள்வாரிப் பரீட்சார்த்திகள்** | மேற்குறிப்பிட்ட வெளிவாரிப் பரீட்சார்த்திக்குரிய தகைமைகள்<br>அல்லது<br>இணை உத்தியோகத்தர் (எம்ஏ – 3) பதவியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை<br>அல்லது |

| | |
|---|---|
| | முகாமைத்துவ உதவியாளர் வகுதியில் (எம்ஏ 1-2) தரம் (II) இல் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை |
| **சம்பள அளவுத்திட்டம்** | ஜேஎம் 1-2- 2025- ரூபா. (74,010- 10× 1,360-18× 2040- 124,330)<br><br>தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியானவர் 01/01/2026 இன் சம்பளத்திற்கு அமைவாக ரூபா. 66,781/- ஆகவுள்ள (ஜேஎம் 1:2) தரம் II இன் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.<br><br>இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும். |

**உதவிக் கணக்காளர் பதவி - ஜேஎம் 1-2, தரம் II (01 வெற்றிடம்)**

| | |
|---|---|
| **வெளிவாரிப் பரீட்சார்த்திகள்** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து முகாமைத்துவம் அல்லது வர்த்தக துறையில் பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டமொன்று<br>**அல்லது**<br>இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (ICASL) இடைநிலை மட்டத் தகைமை<br>**அல்லது**<br>பட்டய முகாமைத்துக் கணக்காளர் நிறுவகத்தின் (CIMA) இடைநிலை மட்டத் தகைமை<br>**அல்லது**<br>சான்றுப்படுத்தப்பட்ட மற்றும் கூட்டாண்மைக் கணக்காளர் சங்கத்தின் (ACCA) இடைநிலை மட்டத் தகைமை<br>**அல்லது**<br>உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா – இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE). |
| **உள்வாரிப் பரீட்சார்த்திகள்** | மேற்குறிப்பிட்ட வெளிவாரிப் பரீட்சார்த்திக்குத் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>**அல்லது**<br>இப்பதவிக்குரிய விடயப் பரப்பில் இணை உத்தியோகத்தர் (எம்ஏ-3) வகுதியின் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்திருத்தல்<br>அல்லது<br>இப்பதவிக்குரிய விடயப் பரப்பில் "முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் சாரா" (எம்ஏ 1-2) தரம் (II) பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் |
| **சம்பள அளவுத்திட்டம்** | ஜேஎம் 1-2- 2025- ரூபா. (74,010- 10× 1,360-18× 2040- 124,330)<br><br>தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியானவர் 01/01/2026 இன் சம்பளத்திற்கு அமைவாக ரூபா. 66,781/- ஆகவுள்ள (ஜேஎம் 1:2) தரம் II இன் ஆரம்பப் |

| | |
|---|---|
| | படிநிலையில் அமர்த்தப்படுவார்.<br><br>இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும். |
| **இணை உத்தியோகத்தர் பதவி<br>(வாணிபம்/ நடவடிக்கைகள் / சந்தைப்படுத்தல் / தொழில்நுட்பம் / நிர்வாகம் / கணக்குகள் / கணக்காய்வு சார்ந்தவை)<br>எம்ஏ 3, தரம் III (05 வெற்றிடங்கள்)** | |
| **வெளிவாரிப் பரீட்சார்த்திகள்** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து இப்பதவிக்குரிய வியாபார முகாமைத்துவம்/ விஞ்ஞானம்/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ சந்தைப்படுத்தல்/ கடல்சார் பொறியியலில் பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டமொன்று. |
| **சம்பள அளவுத்திட்டம்** | எம்ஏ 3- 2025- ரூபா (53,940- 10× 800-11× 1190- 10×1320-5×1350-94,980)<br><br>2026/01/01 இன் சம்பளத்திற்கு அமைவாக, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ரூபா. 49,831/- ஆகவுள்ள (எம்ஏ 3) தரம் II இன் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.<br><br>இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும். |

## சகல பதவிகளுக்கும் ஏற்புடைய பொது நியதிகளும் நிபந்தனைகளும்

**வயதெல்லை** — 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரிப் பரீட்சார்த்திகளுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை** — கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம்

**தகுதிகாண் காலப்பகுதி** — வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கு 03 வருடங்கள் உள்வாரிப் பரீட்சார்த்திகளுக்கு 01 வருடம்

**இதர நன்மைகள்**

1. ஊழியர் சேமலாப நிதியம் (E.P.F) / ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (E.T.F.) நோக்கிய பங்களிப்பு

2. உட்புற மற்றும் வெளிப்புற சிகிச்சைகளுக்கான சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலைசார் காப்பீடு
3. முழுமையான தனிநபர் விபத்துக் காப்புறுதிக் காப்பீடு
4. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைகளை காசாக்குதல்
5. ஏற்புடையதான வருடாந்த மிகையூதியம்
6. சலுகை நியதிகளின் பேரில் அலுவலர் குழாத்துக் கடன்களும் வீடமைப்புக் கடன்களும்
7. சலுகை நியதிகளின் பேரில் வாகனக் கடன்கள்

**விண்ணப்பதாரிகளுக்கான பொது அறிவுறுத்தல்கள்**

- ***சமாதான நீதவான் (JP)/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ சத்தியப் பிரமாண ஆணையாளர்*** ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்ட கல்வி / தொழில்/ பிறப்புச் சான்றிதழ்களினதும் ஏனைய உரிய சான்றிதழ்களினதும் பிரதிகளுடன் ஒன்றிணைந்த சகல விண்ணப்பங்களும், உறவுமுறை சாராத இரு தொடர்பாளர்களின் பெயர்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றுடன் சேர்த்து இவ்விளம்பரம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSCL இன்) தவிசாளரிடம் சென்றடையும் வண்ணம் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியை உங்களின் விண்ணப்பத்திலும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையிலும் தயவுசெய்து குறிப்பிடுக.
- அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்களானவை உரிய நிறுவனத் தலைவர்களிற்கூடாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- காலம் பிந்திய மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரிகள் மதிப்பிடப்படுவர் என்பதை தயவுகூர்ந்து கவனத்திற் கொள்க.

மேற்போந்த தேவைப்பாடுகளுடன் இணக்கமற்றிருத்தலானது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு வழிகோலும். எவ்வழியிலும் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகைமையிழப்பாக அமையும்.

---

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்,**
**இல: 27, MICH கட்டடம்**
**சேர் ராஷிக் பரீட் மாவத்தை (பிறிஸ்ரல் வீதி)**
**கொழும்பு 01.**

**மேலதிக தகவல்களுக்கு - (+94) 011 2 497 800, விரிவு. 264/258/251 - மனிதவளத் திணைக்களம்**

திகதி : 03.06.2026